**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**<u>OS No.158/2021</u>**

**DW.1** is solemnly affirmed on **10.02.2023** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயகுமார் | Father / Husband Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் 2ஆம் எதிர்வாதி ஆவேன். நான் என்னை எதிர்வாதி தரப்பில் சாட்சி 1 ஆக விசாரித்து கொள்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 30.05.1978 தேதியில் A.M. முருகேசன் என்பவர் பெயரில் உள்ள கிரய ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் Ex.B1 and Ex.B2 ஆகும்.
2. 27.07.1978 தேதியில் A.M. முருகேசன் என்பவர் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் Ex.B3 ஆகும்.
3. 10.10.1974 தேதியில் A.M. முருகேசன் மற்றும் எனது தகப்பனார் A.G. ராமன் ஆகியோர் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் Ex.B4 ஆகும்.
4. 28.05.1955 தேதி நாளிட்ட A.G. ராமனின் தாயார் தாதியம்மாள் பெயரில் உள்ள கிரய ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் Ex.B5 and Ex.B6 ஆகும்.

5. 13.08.1990 எனது பாட்டி தாதியம்மாள், எனது தகப்பனார் A.G. ராமன் பெயரில் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மன்ட் ஆவணம் அசல் Ex.B7 ஆகும்.

6. எனது பெயரில் வழங்கப்பட்டுள்ள கணினி பட்டா Ex.B8 ஆகும். ( சாட்டுதலுக்கும், கேள்விக்கும் உரிய உயில் ஆவணத்தின் வழி மேற்படி பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அது குறித்து வாதிகளுக்கு அறிவிப்பு இல்லை என்றும், எனவே, மேற்படி ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது எனவும், எனவே அவற்றை குறியீடு செய்ய இயலாது என்றும், வாதி தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவிக்கிறார். மேற்படி ஆட்சேபனை குறித்து உடனடியாக தீர்மானிக்க இயலாது என்பதால், அவைகள் குறித்து வழக்கின் இறுதியில், தீர்ப்புரையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற காண்புரையோடு உத்தேசமாக மேற்படி ஆவணத்தை எதிர்வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது.)

7. நான் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை அரசு தள்ளுபடி செய்து வழங்கியுள்ள சான்றிதழ் Ex.B9 ஆகும்.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

( வாதி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. அவரது வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணைக்காக 02.03.2023ஆம் தேதிக்கு இவ்வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri